




# செலியா குழுமத்தின் உயர்கல்வி திட்டத்தின் கீழ் மைகாசே குடும்பத்தின் இரு மாணவர்கள் பயன்பெற்றனர்

*(எல்.கே. ராஜ்)*

கோலாலம்பூர், ஏப். 6– செலியா குழுமத்தின் 30 லட்சம் வெள்ளி உயர் கல்வி திட்டத்தின் கீழ் மைகாசே குடும்பத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் பயன் பெற்று உள்ளனர்.

மைகாசேவின் 'அருகில் இருப்பவர்களை நேசிப்போம்' எனும் திட்டத்தின் கீழ் நாட்டில் சிரமப்படும் மக்களுக்கு உதவும் முயற்சியில் செலியா குழுமத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குழுமத்தினர் கிளானாஜெயா, கோம்பாக் பகுதியில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 96 குடும்பங்களுக்கு உதவும் நோக்கில் 1 லட்சம் வெள்ளி நிதி வழங்கி உள்ளது.

இக்குடும்பங்களுக்கு காசோலை வழங்குவதுடன் அவர்களுக்கு விருந்துபசரிப்பு நிகழ்வு ஒன்று நேற்று பத்துகேவ்ஸ் ஜெயண்ட் பேரங்காடியில் நடைபெற்றது.

வர்த்தகத்தைத் தவிர்த்து ஒரு பயலுள்ள காரணத்திற்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் செலியா குழுமத்தினர் மைகாசேவுடன் இணைந்து தற்போது செயலாற்றி வருகிறது.

இங்கு வருகை தந்துள்ள 96 குடும்பங்களுக்கு எங்களால் முடிந்த அளவிற்கு உதவி வழங்கி உள்ளோம். இது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது என்று செலியா குழுமத்தின் தலைவர் டான்ஸ்ரீ சுபஹான் ஜாஸ்மன் கூறினார்.

மைகாசே குழுவினர் நாட்டில் உதவியை எதிர்நோக்கும் மக்களுக்கு உதவும் நோக்கில் இந்த 'அருகில் இருப்பவர்களை நேசிப்போம்' எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்நாட்டில் அதிகமான மக்கள் உதவிகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு இத்திட்டம் மிகவும் சிறந்த வகையில் பயனலிக்கும். எனவே இத்திட்டத்தில் செலியா குழுமத்தினர் தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்று அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் சிரமப்படும் குடும்பங்களுக்கு உதவி செய்வதுடன் அக்குடும்பங்களில் பிறந்த உயர்கல்வி பெற முடியாமல் தவிக்கும் மாணவர்களுக்கும் உதவுவதற்கு செலியா குழுமத்தினர் முன் வந்து உள்ளனர்.

செலியா குழுமத்தின் 30 லட்சம் உயர்கல்வி திட்டத்தின் கீழ் இம்முறை 2 மாணவர்கள் பயனடைந்து உள்ளனர். செலியா குழுமத்திற்கு சொந்தமான சிட்டி பல்கலைக்கழக கல்லூரியில் இம்மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு 30 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளதாக அவர் கூறினார்.